ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1760/17 - 2012 මැයි 31 වැනි බ්‍රහස්පතින්දා - 2012.05.31
*1760/17 ஆம் இலக்கம் – 2012 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

### *2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதித் தொழில் சட்டம்*

*2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் பிரிவு 12 இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் விடுக்கப்பட்ட பணிப்பு.*

*நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்,*
*தலைவர்,*
*இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபை.*

*கொழும்பு,*
*2012, பெப்புருவரி 29.*

**2012 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (வட்டிவீதங்கள்) பணிப்புரை**

*1. இப்பணிப்புரை 2012 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நிதிக்கம்பனிகள் (வட்டிவீதங்கள்) பணிப்புரை என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன் 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் கீழ் உரிமமளிக்கப்பட்ட ஒவ்வொரு நிதிக்கம்பனிக்கும் ஏற்புடைத்தாதனவாதலும் வேண்டும்.* *எடுத்துக்காட்டல்.*

*2. நிதிக் கம்பனியொன்றினால் 2012 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 01 ஆந் திகதிக்கு பின்னர் ஏற்றுக் கொள்ளப் பட்ட அல்லது புதுப்பிக்கப்பட்ட தவணை வைப்புக்களின் மீது செலுத்தப்படக் கூடிய ஆகக் கூடிய ஆண்டு வட்டி வீதம், பின்வருவனவற்றை விஞ்சக் கூடாது.* *ஆகக் கூடிய வட்டிவீதம்.*

*2.1 அத்தகைய வைப்பு 12 மாத கால அல்லது அதற்குக் குறைவான முதிர்ச்சியினைக் கொண்டிருந்தால் 2011 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த காலாண்டுப் பகுதியில் 364 நாட்களுக்கு வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களுக்குப் பிரயோகிக்கப்படும் சாதாரண நிறையேற்றப்பட்ட சராசரி வருவாய்க்கு (இதன் பிறகு பணிப்பாளரினால் அறிவிக்கப்படுவாறான காலாண்டு பகுதியில் திறைசேரி உண்டியல்களுக்கு பிரயோகிக்கப்படும் சாதாரண நிறையேற்றப்பட்ட சராசரி வருவாய்க்கு) 5.5 சதவீத புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்பு.*

*2.2 அத்தகைய வைப்பு 12 மாதங்களுக்கு மேற்பட்ட முதிர்ச்சிக் காலத்தினைக் கொண்டிருந்தால் 2011 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த காலாண்டுப் பகுதியில் 364 நாட்களுக்கு வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களுக்குப் பிரயோகிக்கப்படும் சாதாரண நிறையேற்றப்பட்ட சராசரி வருவாய்க்கு (இதன் பிறகு பணிப்பாளரினால் அறிவிக்கப்படுவாறான காலாண்டு பகுதியில் திறைசேரி உண்டியல் களுக்கு பிரயோகிக்கப்படும் சாதாரண நிறையேற்றப்பட்ட சராசரி வருவாய்க்கு) 6.5 சதவீத புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்பு.*

2.3 2012.03.01 ஆந் திகதியன்று ஐம்பத்தைந்து (55) வயதினை கடந்த நபர்களிடமிருந்து (இதன் பின்னர் "மூத்த பிரஜைகள்" என குறிப்பிடப்படும்) ஏற்றுக்கொள்ளும் அல்லது புதுப்பிக்கும் தவணை வைப்புக்கள் தொடர்பில், நிதிக் கம்பனியொன்று பந்தி 2.1 அல்லது 2.2 இல் குறிப்பிட்டவாறான வட்டிவீதத்திற்கு மேலதிகமாக ஒரு சதவீத புள்ளியினை வழங்கலாம்.

3. நிதிக் கம்பனியொன்றினால் முதிர்ச்சியின் போதான மீட்புப் பெறுமதியினை விடக் குறைவான விலையில் 2012 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 01 ஆந் திகதிக்கு பின்னர் வைப்புச் சான்றிதழின் விற்பனையின் போது அனுமதிக்கக்கூடிய ஆகக்கூடிய கழிவு வீதமானது அந்த சாதனத்தின் மீதான ஆகக்கூடிய ஆண்டு வருவாய்:

3.1 வைப்புச் சான்றிதழ் 12 மாத காலம் அல்லது அதற்கு குறைவான முதிர்ச்சியினைக் கொண்டிருந்தால் 2011 திசெம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த காலாண்டுப் பகுதியில் 364 நாட்களுக்கு வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களுக்குப் பிரயோகிக்கப்படும் சாதாரண நிறையேற்றப்பட்ட சராசரி வருவாய்க்கு (இதன் பிறகு பணிப்பாளரினால் அறிவிக்கப்படுகின்றவாறான காலாண்டு பகுதியில் திறைசேரி உண்டியல்களுக்கு பிரயோகிக்கப்படும் நிறையேற்றப்பட்ட சராசரி வருவாய்க்கு) 5.5 சதவீத புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்பினையும்

3.2 வைப்புச் சான்றிதழ் 12 மாதங்களுக்கு மேற்பட்ட முதிர்ச்சிக் காலத்தினைக் கொண்டிருந்தால் 2011 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த காலாண்டுப் பகுதியில் 364 நாட்களுக்கு வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களுக்குப் பிரயோகிக்கப்படும் சாதாரண நிறையேற்றப்பட்ட சராசரி வருவாய்க்கு (இதன் பிறகு பணிப்பாளரினால் அறிவிக்கப்படுகின்றவாறான காலாண்டு பகுதியில் திறைசேரி உண்டியல்களுக்கு பிரயோகிக்கப்படும் சாதாரண நிறையேற்றப்பட்ட சராசரி வருவாய்க்கு) 6.5 சதவீத புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்பினையும்

விஞ்சாத வகையில், அத்தகைய முறி சம்பந்தமாக வழங்கப்படக்கூடிய வீதம் தீர்மானிக்கப்படல் வேண்டும்.

4. நிதிக் கம்பனியொன்றினால் 2012 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 1 ஆம் திகதிக்கு பின்னர் எந்தவொரு சேமிப்பு வைப்பு மீதும் செலுத்தக்கூடிய ஆண்டொன்றிற்கான ஆகக் கூடிய வட்டி வீதமானது 2011 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த காலாண்டுப் பகுதியில் 91 நாட்களுக்கு வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களுக்குப் பிரயோகிக்கப்படும் நிறையேற்றப்பட்ட சராசரி வருவாயினை (இதன் பிறகு பணிப்பாளரினால் அறிவிக்கப்படுகின்றவாறான காலாண்டு பகுதியில் திறைசேரி உண்டியல்களுக்கு பிரயோகிக்கப்படும் நிறையேற்றப்பட்ட சராசரி வருவாயினை) விஞ்சக்கூடாது.

5. எப்படியிருப்பினும், மூத்த பிரஜைகளினால் பேணப்படும் சேமிப்பு வைப்புக்கள் தொடர்பில், 2011 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த காலாண்டுப் பகுதியில் 91 நாட்களுக்கு வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களுக்குப் பிரயோகிக்கப்படும் நிறையேற்றப்பட்ட சராசரி வருவாய்க்கு (இதன் பிறகு பணிப்பாளரினால் அறிவிக்கப்படுகின்றவாறான காலாண்டு பகுதியில் திறைசேரி உண்டியல்களுக்கு பிரயோகிக்கப்படும் சாதாரண நிறையேற்றப்பட்ட சராசரி வருவாய்க்கு) மேலதிக வட்டியாக ஒரு சதவீத புள்ளியினை நிதிக் கம்பனி வழங்கலாம்.

அறிக்கையிடல். 6. ஒவ்வொரு நிதிக் கம்பனியும் பணிப்பாளரினால் வழங்கப்பட்ட படிவத்தில் ஒவ்வொரு மாதமும் வழங்கப்பட்ட வட்டி வீதங்களின் விபரங்களையும் வைப்புச் சான்றிதழின் கழிவு வீதங்களின் விபரங்களையும் உள்ளடக்கிய அறிக்கையொன்றினை அத்தகைய நிதிக் கம்பனி, அடுத்துவரும் மாதத்தின் 7 ஆம் நாளன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ பணிப்பாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

வரைவிலக் கணம். 7. இப் பணிப்பில்

7.1 "தவணை வைப்புக்கள்" என்பது குறிப்பிட்ட காலத்திற்கு பின்னர் மீள்செலுத்தப்படும் ஒப்பந்தத்தின் கீழ் நிதிக் கம்பனியால் ஏற்றுக்கொள்ளப்படும் ஏதேனும் ஒரு வைப்பினை குறிக்கும்; அத்துடன்

7.2 "பணிப்பாளர்" என்பது இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லாத நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளரைக் குறிக்கும்.

7.3 31 மார்ச்சு, 30 யூன் 30 செப்டம்பர் மற்றும் 31 திசெம்பர் போன்ற திகதிகளில் முடிவுறும் காலாண்டுப்பகுதிகளுக்கான, 91 நாட்கள் மற்றும் 364 நாள் காலாண்டிற்குரிய திறைசேரி உண்டியல்களுக்கு பிரயோகிக்கப்படும் சாதாரண நிறையேற்றப்பட்ட சராசரி வருவாய்கள் பணிப்பாளரினால் வழங்கப்படும்.

மீளப்பெறுகை. 8. 2010 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (வட்டி) பணிப்புரை இத்தால் மீளப் பெறப்படுகின்றது.

6-571/1

## *2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதித் தொழில் சட்டம்*

*2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் பிரிவு 16 இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் ஆக்கப்பட்ட விதி.*

*நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்,*
*தலைவர்,*
*இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபை.*

*கொழும்பு,*
*2012, பெப்புருவரி 27.*

### *2012 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (ஆண்டு உரிமக் கட்டணங்கள்) விதி*

*1. இவ்விதியானது 2012 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (ஆண்டு உரிமக் கட்டணங்கள்) விதி என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் நியதிகளுக்கிணங்க உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் ஒவ்வொன்றும் விண்ணப்பிக்க வேண்டும்.* எடுத்துக்காட்டல்.

*2. இவ்விதியின் திகதியிலிருந்து ஆண்டிற்கான உரிமத்தினைப் பெறுவதற்கு நிதிக் கம்பனியொன்றினால் செலுத்தப்பட வேண்டிய உரிமக் கட்டணம் ரூ. 500,000 இருத்தல் வேண்டுமென்பதுடன் உரிமம் பெறும் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ இலங்கை மத்திய வங்கிக்கு செலுத்தப்படல் வேண்டும்.* முதல் ஆண்டிற்கான உரிமக் கட்டணம்.

*3. 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் கீழ் உரிமம் பெற்ற ஒவ்வொரு நிதிக் கம்பனியும் 2013 ஆம் ஆண்டும் அடுத்து வரும் ஆண்டுகளுக்கும் ஏற்புடைத்தான ஆண்டு உரிமக் கட்டணத்தை முன்னைய ஆண்டின் இறுதியிலுள்ளவாறான கணக்காய்வு செய்யப்பட்ட ஐந்தொகையில் காட்டப்பட்டவாறான மொத்தச் சொத்துக்களின் அடிப்படையில் கீழே காட்டப்பட்டவாறு முன்னைய கலண்டர் ஆண்டின் திசெம்பர் 31 ஆம் நாளன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ இலங்கை மத்திய வங்கிக்கு செலுத்துதல் வேண்டும்.* ஆண்டு உரிமக் கட்டணம்.

| மொத்தச் சொத்துக்கள் | ஆண்டு உரிமக் கட்டணம் (ரூ.) |
|---|---|
| ரூ. 1 பில்லியன் அல்லது அதற்குக் கீழ் | 300,000 |
| ரூ. 1 பில்லியனிற்கு மேல் ரூ. 5 பில்லியன் வரை | 500,000 |
| ரூ. 5 பில்லியனிற்கு மேல் ரூ. 10 பில்லியன் வரை | 750,000 |
| ரூ. 10 பில்லியனிற்கு மேல் | 1,000,000 |

*6-571/2*

---

## *2011 ஆம் ஆண்டின் நிதித் தொழில் சட்டம்*

*2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் பிரிவு 16 இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் ஆக்கப்பட்ட விதி.*

*நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்,*
*தலைவர்,*
*இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபை.*

*கொழும்பு,*
*2012, பெப்புருவரி 27.*

### *2012 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (விண்ணப்பம்) விதி*

*1. இவ்விதியானது 2012 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (விண்ணப்பம்) விதி என எடுத்துக் காட்டப்படலாம் என்பதுடன், 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் 5(3)(அ) அல்லது 5(7) ஆம் பிரிவுகளினது நியதிகளில் நிதித் தொழிலை மேற்கொள்வதற்காக உரிமங்களைப் பெறுவதற்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு கம்பனிக்கும் ஏற்புடைத்தாதலும் வேண்டும்.* எடுத்துக்காட்டல்.

*2. உரிமத்திற்கான ஒவ்வொரு விண்ணப்பமும் கம்பனியினால் மத்திய வங்கியின் வெப்தளமான* http://www.cbs.gov.lk *இல் கிடைக்கத்தக்கதாவுள்ள இங்கேயுள்ள அட்டவணையின் 'படிவம்' எஸ்என்பீஎவ்ஜ/எல்எவ்சி/ஏ' இல் மேற்கொள்ளப்படுதல் வேண்டும் என்பதுடன் இவ்விதி நடைமுறைக்கு வரும் நாளிலிருந்து தொழிற்பாட்டிற்கு வருதலாதலும் வேண்டும்.* விண்ணப்பப்படிவம்.

விண்ணப்பக் கட்டணம்.

3. ஒவ்வொரு விண்ணப்பதாரக் கம்பனியும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்திற்கு விண்ணப்பப் படிவங்களை சமர்ப்பிக்கும் நேரத்தில் ரூ. 100,000 கொண்ட மீளளிக்கப்படாத விண்ணப்பக்கட்டணத்தினைச் செலுத்துதல் வேண்டும்.

நிதிக் கம்பனிகளின் பதிவேடு.

4. இச்சட்டத்தின் கீழ் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளின் பதிவிற்காகப் பேணப்படுகின்ற பதிவேடு இங்கேயுள்ள அட்டவணை ‘படிவம் பீ1’ இன் தன்மைகளைக் கொண்டிருக்கும்.

2005 ஆம் ஆண்டின் முதலாம் இலக்க மற்றும் 2010 ஆம் ஆண்டின் முதலாம் இலக்க விதிகள் நீக்கப்படுகின்றன.

5. 2005 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க கம்பனிகள் (பதிவு செய்தல் மற்றும் உரிமம் வழங்கல்) விதிகளும் 2010 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (பதிவு செய்தல் மற்றும் உரிமம் வழங்கல் திருத்தம்) விதிகளும் இத்தால் நீக்கப்படுகின்றன.

எஸ்என்பீஎவ்ஜ/எல்எவ்சி/ஏ

இரகசியமானது

**2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் கீழ் உரிமத்திற்கான விண்ணப்பம்**

அலுவலகப் பாவனைக்கு

விண்ணப்பதாரர்: ..................................................
விண்ணப்பம் பெறப்பட்ட திகதி: ...........................
மதிப்பீட்டுக் கட்டணம்: ...........................................
குறிப்புக்கள்: ..........................................................

**முக்கியமானது**

இவ்விண்ணப்பத்தில் சமர்ப்பிக்கப்படும் தகவல்கள் பொய்யானதாக அல்லது பூரணமற்றதாக அல்லது பிழையானதாக இருக்குமிடத்து அதனைச் சமர்ப்பித்த எவரேனும் ஆள் 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் 5(9) ஆம் பிரிவின் கீழ் தவறொன்றிற்கு குற்றவாளியாகக் காணப்பட வேண்டியதுடன் குறிப்பிட்ட சட்டத்தின் 56(2) ஆம் பிரிவின் கீழ் தண்டிக்கப்படுதலும் வேண்டும்.

**அறிவுறுத்தல்கள்**

(1) 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் நிதித் தொழிலினை கொண்டு நடத்துவதற்கு உரிமத்தினைப் பெற்றுக் கொள்வதற்கான அடிப்படைத் தேவைப்பாடுகள் அட்டவணை 1 இல் தரப்பட்டுள்ளன.

(2) விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கும் பொழுது ரூ. 100,000 கொண்ட மீளளிக்கப்படாத விண்ணப்பக் கட்டணத்தினை செலுத்துதல் வேண்டும்.

(3) அனைத்து விண்ணப்பங்களும் தட்டச்சில் பொறிக்கப்பட வேண்டும் அல்லது பெரிய எழுத்தில் தெளிவாக எழுதப்படல் வேண்டும்.

(4) விண்ணப்பத்திலுள்ள விடயங்களுடன் தொடர்புபட்ட முழு விபரங்களையும் தருவதற்கு வழங்கப்பட்டுள்ள இடம் போதுமானதாக இல்லாதவிடத்து, அவசியமாவிடத்து தனியான தாள்களை தயவுசெய்து பயன்படுத்தவும். அத்தகைய தாள்கள் தொடர்பான விடயங்களின் தொடர் விபரங்களை கொண்டிருத்தல் வேண்டும். விடயமொன்று ஏற்புடைத்தல்லாதவிடத்து அதனை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

(5) (அ) இணைப்புக்கள் உட்பட, பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் குறைந்தது இரண்டு பணிப்பாளர்களின் முதலெழுத்துக்கள் இடப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து ஆவணங்களும் கூற்றுக்களும் (கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் தவிர) உண்மையானதும் துல்லியமானதுமென குறைந்தது இரண்டு பணிப்பாளர்களினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(6) பூரணப்படுத்தப்பட்டு விண்ணப்பதாரக் கம்பனியின் பணிப்பாளர் சபையின் அனைத்து உறுப்பினர்களினாலும் கையொப்பமிடப்பட்ட விண்ணப்பப் படிவமானது அட்டவணை II இல் குறிப்பிடப்பட்ட தேவைப்படுத்தப்பட்ட மற்றைய ஆவணங்களுடன் சேர்த்து பின்வரும் முகவரியில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்:-

பணிப்பாளர்,
வங்கியல்லா நிதி நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி,
இல. 30, சனாதிபதி மாவத்தை,
கொழும்பு 01,
இலங்கை.

**2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் கீழ் உரிமத்திற்கான விண்ணப்பம்**

சேரல்: இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை
இலங்கை மத்திய வங்கி
கொழும்பு.

......................................................................................................................................................என்ற முகவரியில் அமைந்துள்ள (முகவரி) ......................................................................................................................................கம்பனி (கம்பனியின் பெயர்) 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் ஏற்பாட்டு நியதிகளில் உரிமமொன்றிற்காக இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபைக்கு இத்தால் விண்ணப்பிக்கிறது. விண்ணப்பத்திற்கு ஆதரவாக பின்வரும் தகவல்களும் ஆவணங்களும் சமர்ப்பிக்கப் படுகின்றன.

## பகுதி I

1. கம்பனியின் பொதுவான தகவல்கள்

   1.1 கம்பனியாக கூட்டிணைக்கப்பட்ட திகதி:----.

   1.2 வியாபாரம் தொடங்கப்படும் திகதி:----.

   1.3 பின்வருவனவற்றின் முகவரி:----.

      1.3.1 பதிவு செய்யப்பட்ட அலுவலகம்:----.

      1.3.2 தலைமை/நிருவாக அலுவலகம்:----.

      1.3.3 கிளை அலுவலகம் (அலுவலகங்கள்):-

| அமைவிடம் | மாவட்டம் | மாகாணம் | தொடர்பு கொள்வதற்கான விபரங்கள் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

   1.4 கம்பனியின் நிதியியல் ஆண்டு:

1.5 பிரதான தொழில் துறையின் விபரங்கள்:----.

1.6 கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்டுள்ளமை பற்றிய விபரங்கள்:-

1.6.1 கம்பனி பட்டியலிடப்பட்டதொரு கம்பனியா, அவ்வாறாயின் எப்பொழுதிலிருந்து?:----.
1.6.2 பட்டியலிடப்பட்டிருக்கவில்லையாயின், பட்டியலிட எதிர்பார்த்திருக்கும் திகதி:----.

1.7 விண்ணப்பிக்கும் திகதியன்று உள்ளவாறு விண்ணப்பதார கம்பனியின் பங்குடமை அமைப்பு:-

1.7.1 பங்குகளின் மொத்த எண்ணிக்கை:----.
1.7.2 பங்குடமையாளர்களின் எண்ணிக்கை:----.
1.7.3 முக்கியமான பத்து பங்குடமையாளர்களின் பெயர்கள்:----.

| பங்குடமையாளர்களின் பெயர் | பங்குகளின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட பங்கு மூலதனத்தின் % |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |
| 6. | | |
| 7. | | |
| 8. | | |
| 9. | | |
| 10. | | |

1.8 கம்பனியினது வங்கியாளர்களின் பெயர்களும் முகவரிகளும்:----.

1.9 கம்பனிச் செயலாளரின் பெயரும் முகவரியும்:----.

1.10 கணக்காய்வாளர்கள் (வெளிவாரி):-

1.10.1 கணக்காய்வாளரின் பெயர், முகவரி மற்றும் தொடர்பு கொள்வதற்கான விபரங்கள்:----.
1.10.2 குறிப்பிட்ட கணக்காய்வாளர் எந்த நிதி ஆண்டிலிருந்து கம்பனியினைக் கணக்காய்வு செய்து வருகின்றார்?:----.
1.10.3 கணக்காய்வு நிறுவனத்தின் பங்குடமையாளர்/பணிப்பாளர்கள் எவரேனும் கம்பனியின் பங்குடமையாளர்களாக உள்ளனரா? (ஆம் எனில் விபரங்களைத் தரவும்):----.
1.10.4 கடந்த மூன்று நிதியியல் ஆண்டுகளாக செலுத்தப்பட்ட கணக்காய்வுக் கட்டணம் (ரூபா மில்லியன்):----.
1.10.5 கணக்காய்வு நிறுவனத்திற்கு அல்லது நிறுவனத்தின் பங்காளர்/பணிப்பாளருக்கு ஏதேனும் நிதியியல் கடன் வசதி வழங்கப்பட்டுள்ளதா (ஆம் எனில் தயவுசெய்து விபரங்களைத் தரவும்):----.

1.11 கணக்காய்வாளர்கள் (உள்வாரி):-

1.11.1 உள்ளக கணக்காய்வாளர் அறிக்கைகளுக்கான அதிகாரியின் பெயர்:----.
1.11.2 உள்ளக கணக்காய்வு தொழிற்பாடுகள் வெளிமூலங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதா?:----.
1.11.3 பின்வரும் விபரங்களை தெரிவிக்குக:

1.11.3.1 உள்ளக கணக்காய்வாளரின் பெயர்: (வெளிமூலங்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்படுமிடத்து முகவரியினையும் தொடர்பு கொள்வதற்கான விபரங்களையும் தருக):----.
1.11.3.2 தகைமைகளும் அனுபவமும்:----.
1.11.3.3 கம்பனியில் பணியாற்றிய ஆண்டுகளின் எண்ணிக்கை:----.

1.11.4 உள்ளக கணக்காய்விலுள்ள மொத்த அலுவலர்களும் அவர்களின் தகைமைகளும்:-

| பெயர் | தகைமைகள் | பணியிலுள்ள ஆண்டுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |

2. கம்பனியின் வெளிவாரிக் கணக்காய்வாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட மைய மூலதனம்/
(கடந்த மூன்று நிதியியல் ஆண்டுகளின் இறுதியிலும் விண்ணப்பம் செய்யப்பட்ட மாதத்திற்கு உடனடியாக முற்போந்த மாதத்தின் இறுதியிலுமுள்ளவாறு.):-

(ரூ. 000' இல்)

| | | | 20... | 20... | 20... | .... இல் உள்ளவாறு |
|---|---|---|---|---|---|---|
| 2.1 | வழங்கப்பட்டு முழுமையாகச் செலுத்தப் பட்ட சாதாரண பங்குகள்/பொதுவான இருப்பு - காசிற்காக மட்டும் வழங்கப்பட்ட தொகை (2.1.1 + 2.1.2) | | | | | |
| | 2.1.1. | சாதாரண பங்குகள் / பொதுவான இருப்பு (வாக்கெடுப்பு) | | | | |
| | 2.1.2 | சாதாரண பங்குகள் / பொதுவான இருப்பு (வாக்கெடுப்பு அற்றது) | | | | |
| 2.2 | ஒன்று சேர்க்கப்படாத வழங்கப்பட்டு முழுமை யாகச் செலுத்தப்பட்ட மீட்கத்தக்கதல்லாத முன்னுரிமைப் பங்குகள் | | | | | |
| 2.3 | பொது ஒதுக்குகளும் ஏனைய கட்டற்ற ஒதுக்குகளும் | | | | | |
| 2.4 | இறுதியாகக் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குக் கூற்றுக்களில் காட்டப்பட்டவாறு ஒன்று சேர்ந்த இலாபம் அல்லது இழப்பு | | | | | |
| 2.5 | கம்பனியின் வெளிவாரி கணக்காய்வாளரின் உறுதிப்படுத்தலுக்குட்பட்டு பிரசுரிக்கப்படாத நடப்பாண்டின் இலாபம்/இழப்புக்கள் | | | | | |
| 2.6 | மைய மூலதனம் (2.1 இலிருந்து 2.5 வரை யான தொகை) | | | | | |

1/2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதி தொழில் சட்டத்தின் 74 ஆம் பிரிவில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணம்.

2.7 கம்பனி அதன் சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்திருப்பின், தயவுசெய்து பின்வருவனவற்றைக் குறிப்பிடவும்:-

| சொத்தின் வகை | அமைவிடம் | செலவு | மீள் மதிப்பீடு செய்யப்பட்ட திகதி | மிகை/பற்றாக்குறை |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

2.7.1 மீள் மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்களின் மதிப்பீட்டு அறிக்கை ஒவ்வொன்றினதும் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி.

3. பணிப்பாளர் சபை:-

| பணிப்பாளரின் முழுப்பெயர் (தயவுசெய்து தலைவரின் பெயரிலிருந்து தொடங்கவும்) | வதிவிட முகவரி | பிறந்த திகதி | தே. அ. அட்டை இலக்கம் | கடவுச்சீட்டு இல. | விண்ணப்பதாரக் கம்பனிக்கு நியமிக்கப்பட்ட திகதி | விண்ணப்பதாரக் கம்பனியில் அவர்/அவள் பணிப்பாளராக இருந்த ஆண்டுகளின் எண்ணிக்கை | அலுவலகப் பாவனைக்கு |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | | | | | | | |
| 2. | | | | | | | |
| 3. | | | | | | | |
| 4. | | | | | | | |
| 5. | | | | | | | |
| 6. | | | | | | | |
| 7. | | | | | | | |
| 8. | | | | | | | |
| 9. | | | | | | | |
| 10. | | | | | | | |
| 11. | | | | | | | |
| 12. | | | | | | | |
| 13. | | | | | | | |

## பகுதி II

4. கம்பனியானது இன்னொரு கம்பனியின் துணை அல்லது இணைக் கம்பனி அல்லது கம்பனிக் குழுமமொன்றின் உறுப்பினரா என்பதனைக் குறிப்பிடவும்:----.

4.1 அவ்வாறாயின் உடமைக் கம்பனியின் விபரங்களை தரப்பட்டுள்ள படிவம் எஸ்என்பீஎவ்ஐ/எல்எவ்சி/எச்சி இல் தயவுசெய்து தரவும்:----.

4.2 உடமைக் கம்பனியின் கடந்த மூன்று ஆண்டுகளுக்கான கணக்காய்வு செய்யப்பட்ட ஆண்டுக் கணக்குகளைச் சமர்ப்பிக்கவும்.

5. கீழேயுள்ள படிவத்திலுள்ளவாறு தொடர்பான தரப்பினரின்[2] விபரங்களைத் தயவு செய்து தரவும்:-

| கம்பனி | பங்கு முதலீடுகள் | | பெறத்தக்க உள்ளகக் கம்பனி நடைமுறைக் கணக்கு | வேறு ஏதாவது வெளிப்படுத்துகைகள் (தயவுசெய்து குறிப்பிடவும்) | வியாபாரத்தின் தன்மை |
|---|---|---|---|---|---|
| | செலவு (ரூ.000') | பங்குடமை % | | | |
| சொந்த துணைக் கம்பனிகள் | | | | | |
| (i) | | | | | |
| (ii) | | | | | |
| (iii) | | | | | |
| சொந்த இணைக் கம்பனிகள் | | | | | |
| (i) | | | | | |
| (ii) | | | | | |
| (iii) | | | | | |
| ஏனைய முதலீட்டு நிறுவனங்கள் | | | | | |
| (i) | | | | | |
| (ii) | | | | | |
| (iii) | | | | | |
| வேறு ஏதேனும் தொடர்பான தரப்பு | | | | | |
| (i) | | | | | |
| (ii) | | | | | |
| (iii) | | | | | |

5.1 சபைப் பணிப்பாளர்களின் பெயர்களும் தொடர்பான கம்பனியில் அவர்களினால் வைத்திருக்கப்படும் பங்குகளின் அளவும்:----.

5.2 இறுதி நிதியியல் ஆண்டிற்கான கம்பனியின்/கம்பனிகளின் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளைத் தருக:----.

[2] உடமைக் கம்பனியாகவுள்ள கம்பனியொன்று,உடமைக் கம்பனியின் துணை அல்லது இணைக் கம்பனியொன்று, உடமைக் கம்பனியின் உடமைக் கம்பனியாக உள்ள துணை அல்லது இணைக் கம்பனி, விண்ணப்பதார கம்பனியின் துணை, இணைக் கம்பனி அல்லது விண்ணப்பதாரக் கம்பனி உறுப்பினராகவுள்ள குழுமத்தில் உறுப்பினராகவுள்ள கம்பனியொன்று.

## *பகுதி III*

*6. கம்பனி கடன் வழங்கலில் ஈடுபட்டிருக்குமாயின், கீழே தரப்பட்டுள்ள படிவத்தின்படி, விண்ணப்ப திகதியிலுள்ளவாறு விபரங்களைத் தருக:-*

*6.1 தொடர்பான தரப்பினருக்கான கடன் வழங்கல்[3]:-*

| | விடயம் | கணக்கு களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட பெறுமதி (ரூ.000') | ஒன்று சேர்ந்த வட்டியும் ஏனைய விதிப்புக்களும் (ரூ.000') | கடைசி நிதியியல் ஆண்டின் இறுதியில் தொங்கலிலுள்ள வட்டியும் ஏனைய விதிப்புக்களும் (ரூ.000') |
|---|---|---|---|---|---|
| (i) | உடமைக் கம்பனிக்கான கடன்கள் | | | | |
| (ii) | துணை மற்றும் இணைக் கம்பனிகளுக்கான கடன்கள் | | | | |
| (iii) | பணிப்பாளர்களுக்கும் அவர்களது உறவினர்களுக்குமான[4] கடன்களும் முற்பணங்களும் | | | | |
| (iv) | உத்தரவாதங்களின் மீது தனிப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் அல்லது வேறு ஏதேனும் நிதியியல் கடன் வசதிகள் அல்லது பணிப்பாளர், கம்பனிப் பணிப்பாளரின் உறவினர் அல்லது எவரேனும் கம்பனி ஊழியரின் இழப்பீடு | | | | |
| (v) | பிணையிடப்படாத கடன்கள் (வாக்குறுதிச் சான்றிதழ்கள் மற்றும் வர்த்தகப் பத்திரங்கள் பிணையாகக் கருதப்பட மாட்டாது) | | | | |
| (vi) | அதன் சொந்தப் பங்குகளைக் கொள்வனவு செய்வதற்கான கடன்கள் மற்றும் முற்பணங்கள் | | | | |
| (vii) | இதன் சொந்தப் பங்குகளை பிணையாகக் கொண்டு அல்லது அதன் துணைக் கம்பனி எதனதும் பங்குகளை பிணையாகக் கொண்டு வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள் | | | | |

*6.2 தொடர்பான தரப்பினருக்கு கம்பனியின் கடன் வசதி, பின்வரும் விபரங்களை ஒவ்வொரு நிறுவனத்திற்கும் தனித்தனியாக வழங்கவும்:-*

| தொடர்பான தரப்பினரின் பெயர் | உறவு முறை | வசதியின் வகை | வழங்கப்பட்ட தொகை | வெளிநின்ற தொகை | வழங்கப்பட்ட பிணை | கடன் வழங்கப்பட்ட திகதி | ஆண்டு வட்டி வீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |

*3 மேலே 5 ஆம் பிரிவில் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு*

*4 உறவினர் என்பது அத்தகைய தனிப்பட்டவரின் வாழ்க்கைத் துணை மற்றும் தங்கியிருக்கும் பிள்ளை எனப் பொருள்படும்.*

*6.3* சொத்துக்களின் தரம்:-

| *சாதனம்* | *செயற்படும் கடன்கள்* | | *செயற்படாக் கடன்கள்* | | | | *மொத்தம்* | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | *0-6 மாதங்கள் நிலுவையிலுள்ளவை* | | *6-12 மாதங்கள் நிலுவையிலுள்ளவை* | | *12 மாதங்களுக்கு மேல் நிலுவையிலுள்ளவை* | | | |
| | *கணக்குகளின் எண்ணிக்கை* | *வெளிநின்ற தொகை (ரூ.000')* | *கணக்குகளின் எண்ணிக்கை* | *வெளிநின்ற தொகை (ரூ.000')* | *கணக்குகளின் எண்ணிக்கை* | *வெளிநின்ற தொகை (ரூ.000')* | *கணக்குகளின் எண்ணிக்கை* | *வெளிநின்ற தொகை (ரூ.000')* |
| தவணைக் கடன்கள் | | | | | | | | |
| நிதிக் குத்தகை | | | | | | | | |
| தவணைக் கொள்வனவு | | | | | | | | |
| அடகு பிடித்தல் | | | | | | | | |
| ஏனைய சாதனங்கள் | | | | | | | | |
| மொத்தம் | | | | | | | | |

7. இறுதியாகக் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளின்படி பங்குடமையாளர் நிதியத்தில் 10% இனை விஞ்சிய விண்ணப்பதாரர் கம்பனியின் கடன்பாட்டாளர்கள்:-

| *கடன்பாட்டாளரின் பெயர்* | *வழங்கப்பட்ட தொகை (ரூ.000')* | *ஆண்டு வட்டி வீதம்* | *கடன் வழங்கப்பட்ட திகதி* | *பிணையின் தன்மை* | *வெளிநின்ற தொகை (விண்ணப்பத்திலுள்ளவாறு) (ரூ.000')* |
|---|---|---|---|---|---|
| *1.* தனிப்பட்டவர்கள் | | | | | |
| (i) | | | | | |
| (ii) | | | | | |
| (iii) | | | | | |
| (iv) | | | | | |
| *2.* குழுமக் கடன்பாட்டாளர் | | | | | |
| (i) | | | | | |
| (ii) | | | | | |
| (iii) | | | | | |
| (iv) | | | | | |

8. விண்ணப்பத் திகதியிலுள்ளவாறு கம்பனியின் கடன்பாடுகள் (கீழேயுள்ள வகைகளின்படி தனிப்பட்டவர்களது கடன்பாடுகளின் விபரங்களைத் தயவுசெய்து தரவும்):-

| மூலம் | பெறப்பட்ட தொகை (ரூ.000') | ஆண்டு வட்டி வீதம் | கடன் பெறப்பட்ட திகதி | பிணையின் தன்மை | வெளிநின்ற தொகை (விண்ணப்பத்தி லுள்ளவாறு) (ரூ.000') |
|---|---|---|---|---|---|
| (அ) வங்கியிலிருந்து<br>i. ........................<br>ii. ........................<br>iii. ........................ | | | | | |
| (ஆ) பணிப்பாளரிடமிருந்து<br>i. ........................<br>ii. ........................<br>iii. ........................ | | | | | |
| (இ) ஏனைய மூலங்களிலிருந்து<br>i. ........................<br>ii. ........................<br>iii. ........................<br>மொத்தம் | | | | | |

9. விண்ணப்பத் திகதியிலுள்ளவாறு விண்ணப்பதாரக் கம்பனியின் ஐந்தொகைக்கு வெளியேயுள்ள விடயங்கள்:-

| பொறுப்புக்கள் | திகதி | பெறுமதி (ரூ.000') |
|---|---|---|
| பணிப்பாளர்களின் சார்பில் வழங்கப்பட்டுள்ள உத்தரவாதங்கள் | | |
| துணை மற்றும் இணைக் கம்பனிகளின் சார்பில் வழங்கப்பட்டுள்ள உத்தரவாதங்கள் | | |
| ஏனையோர் சார்பில் வழங்கப்பட்ட உத்தரவாதங்கள் (தயவுசெய்து குறிப்பிடவும்) | | |
| வேறு ஏதேனும் ஐந்தொகைக்கு வெளியேயான பொறுப்புக்கள் | | |

10. விண்ணப்பத் திகதிக்கு முன்னரான ஓராண்டு காலப்பகுதியில் கடன் வழங்கல் வீதங்கள்/விதிப்புக்கள்:-

| வகை | கடன் வழங்கல் வீதங்கள் (வீச்சு) ஆண்டு | | | | செலுத்தத் தவறிய விதிப்புக்கள் |
|---|---|---|---|---|---|
| | 12 மாதங்களுக்கும் குறைவானவை | 12 மாதங்கள் | 24 மாதங்கள் | 24 மாதத்திற்கு மேல் | % தொகை (ரூ.000') |
| கடன்கள் | | | | | |
| தவணைக் கொள்வனவுகள்<br>நிதி குத்தகைக்குவிடுதல் | | | | | |
| அடகுவைத்தல்<br>ஏனைய சாதனங்கள் | | | | | |

நாங்கள் 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் 5(9) ஆம் பிரிவில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களைக் கவனத்தில் கொண்டிருக்கிறோம் என்பதனை பிரகடனப்படுத்துவதுடன் இவ்விண்ணப்பத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விபரங்கள் சரிபார்க்கப்பட்டுள்ளன என்பது பற்றியும் அனைத்து விடயங்களும் பூரணப்படுத்தப்பட்டிருக்கின்றன என்பது பற்றியும் எமது அறிவுக் கெட்டிய வரையில் தகவல்கள் உண்மையானதும் துல்லியமானதும் எனவும் நம்புகிறோம் எனவும் பிரகடனம் செய்கிறோம்.

.................................................................................................................. இற்காகவும் அதன் சார்பிலும்
(விண்ணப்பதாரக் கம்பனி)

----,

பணிப்பாளர்களின் பெயர்கள் கையொப்பங்கள்.

திகதி: ........................................

(கம்பனியின் பொதுவான முத்திரை)

அட்டவணை - I

**2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் கீழ் உரிமம் பெறுவதற்கான அடிப்படைத் தேவைப்பாடுகள்**

1. விண்ணப்பதாரக் கம்பனியொன்று நிதிக் கம்பனியொன்றாக உரிமம் பெறுவதற்கு பின்வருவனவற்றில் தகைமை பெறல் வேண்டும்:-

(அ) 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கம்பனியொன்றாக பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்;

(ஆ) 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கருத்தின்படி உத்தரவாதத்தின் மூலமான வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றாக, தனிப்பட்டதொரு கம்பனியாக, கரைகடந்த கம்பனியாக அல்லது வெளிநாட்டுக் கம்பனியொன்றாக இருத்தல்கூடாது.

2. 2011 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (குறைந்தபட்ச மைய மூலதனம்) பணிப்புரையின்படி குறைந்தபட்ச மூலதனமாக ரூ. 400 மில்லியனைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**அட்டவணை - II**

**விண்ணப்பப் படிவத்துடன் பின்வரும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்:-**

(1) கூட்டிணைப்புச் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்று

(2) மைய மூலதனம் கிடைக்கத்தக்கதாகவுள்ளமை பற்றிய கணக்காய்வாளர்களின் உறுதிப்படுத்தல்.

(3) கம்பனியின் அமைப்பு அகவிதி அல்லது கம்பனியின் விஞ்ஞாபனம்

(4) பதிவுசெய்யப்பட்ட முகவரி, பணிப்பாளர்களின் பட்டியல் மற்றும் ஆண்டுக்கூற்று என்பன தொடர்பாக கம்பனி பதிவாளருடன் கோவைப்படுத்தப்பட்டுள்ள பிந்திய படிவங்கள் ஒவ்வொன்றினதும் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி (படிவங்கள் 13, 15,20).

(5) படிவங்கள் எஸ்என்பீஎவ்ஐ/ஏ 1, எஸ்என்பீஎவ்ஐ/டி 1, எஸ்என்பீஎவ்ஐ/ஏ 2, எஸ்என்பீஎவ்ஐ/டி 2 இல் தெரிவிக்கப் பட்டவாறு பணிப்பாளர்களின் சத்தியக் கடதாசி மற்றும் பிரகடனங்கள்.

(6) விண்ணப்பதாரக் கம்பனியின் அமைப்பியல் வரைபடம்.

(7) விண்ணப்பதாரக் கம்பனியின் தொழிற்பாட்டுக் கைநூலின் பிரதியொன்று

(8) நிதித் தொழிலை கொண்டு நடத்துவது பற்றிய சாத்தியவள ஆய்வு அறிக்கை.

(9) உரிமம் பெற்றதன் பின்னர் முதல் 3 ஆண்டுகளுக்கான வைப்புக்கள், கடன் வழங்கல் மற்றும் இலாபம் மற்றும் நட்டம் பற்றிய எறிவுகள்.

(10) 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் சட்டம் மற்றும் 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதித் தொழில் சட்டம் என்பனவற்றின் கீழ் விடுக்கப்பட்ட பணிப்புரைகள் மற்றும் ஆக்கப்பட்ட விதிகள் என்பனவற்றிற்கு இணங்கியொழுகுவதற்கான கம்பனியின் இயலுமை பற்றிய பணிப்பாளர் சபையின் 'கம்பனி பற்றிய மதிப்பீடு'.

(11) கடந்த மூன்று நிதியாண்டுகளுக்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்கள் மற்றும் விண்ணப்பம் செய்யப்பட்ட மாதத்திற்கு உடனடியாக முற்போந்த மாதத்தின் இறுதியிலுள்ளவாறான நிதியியல் கூற்றுக்கள்.

(12) கடந்த நிதியியல் ஆண்டிற்கான கணக்காய்வாளரின் கணக்காய்வு முடிவடைந்ததும் பணிப்பாளர் சபைக்கு அவர்களினால் வழங்கப்பட்ட இரகசியக் கடிதத்தின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்று.

(13) உள்நாட்டரசிறைத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட வரித் தீர்ப்பனவுச் சான்றிதழ்.

**ஏற்கனவேயுள்ள கம்பனியொன்று விண்ணப்பதாரக் கம்பனியொன்றின் தோற்றுவிப்பாளராக செயற்படுமிடத்து, பின்வரும் மேலதிக ஆவணங்களுடன் சேர்த்து எஸ்என்பீஎவ்ஐ/எல்எவ்சி/பி இல் தரப்பட்டுள்ள படிவத்தினையும் சமர்ப்பிப்பது அவசியமாகும்:-**

14. ஊக்குவிப்புக் கம்பனியின் அமைப்பு அகவிதி:----.

15. குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாட்டிற்குக் குறையாத விதத்தில் வழங்கப்பட்டு செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்துடன் சேர்த்து, நிதித் தொழிலை மேற்கொள்ளும் நோக்கத்திற்காக புதிய கம்பனியினை உருவாக்குவதன் பொருட்டு பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்:----.

16. ஊக்குவிப்புக் கம்பனியின் கடந்த 3 ஆண்டுகளுக்கான கணக்காய்வு செய்யப்பட்ட ஆண்டுக் கணக்குகள்:----.

எஸ்என்பீஎவ்ஐ/எல்எவ்சி/பி

**ஊக்குவிப்புக் கம்பனியின் விபரங்களுக்கான படிவம்**

1. ஊக்குவிப்புக் கம்பனியின் பொதுவான தகவல்கள்:-

1.1 கம்பனியாக கூட்டிணைக்கப்பட்ட திகதி:----.

1.2 தொழில் தொடங்கப்பட்ட திகதி:----.

1.3 பின்வருவனவற்றின் முகவரி:-

1.3.1 பதிவு செய்யப்பட்ட அலுவலகம்:----.

1.3.2 தலைமை/நிருவாக அலுவலகம்:----.

1.3.3 கிளை அலுவலகம்/அலுவலகங்கள்:----.

1.4 பிரதான தொழிலின் விபரங்கள்:----.

1.5 ஊக்குவிப்புக் கம்பனியின் பங்குடமை அமைப்பு:-

1.5.1 பத்து முக்கிய பங்குடமையாளர்களின் பெயர்கள்:-

| பங்குடமையாளரின் பெயர் | பங்குகளின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட பங்கு மூலதனத்தின் % |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |
| 6. | | |
| 7. | | |
| 8. | | |
| 9. | | |
| 10. | | |

2. பணிப்பாளர்களின் சபை:-

| பணிப்பாளரின் முழுப்பெயர் மற்றும் விலாசம் (தயவுசெய்து தலைவரின் பெயரிலிருந்து தொடங்கவும்) | பிறந்த திகதி | தகைமைகள் | அனுபவங்கள் | தே.அ. அட்டை இலக்கம் | கடவுச்சீட்டு இல. |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

படிவம் எஸ்என்பீஎவ்ஐ/எல்எவ்சி/ பி இல் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் சரிபார்க்கப்பட்டு அனைத்து விடயங்களும் பூரணப்படுத்தப்பட்டுள்ளன என்றும் தகவல்கள் எமது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரை உண்மையானவையும் துல்லியமானவையும் என நாங்கள் பிரகடனப்படுத்துகின்றோம்.

........................................................................................................................................இற்காகவும் அதன் சார்பிலும்
(ஊக்குவிப்புக் கம்பனி)

----,

பணிப்பாளர்கள் பெயர்கள் கையொப்பங்கள்

திகதி: .....................................

(கம்பனியின் பொதுவான முத்திரை)

எஸ்என்பீஎவ்ஜ/எல்எவ்சி/எச்சி

**உடமைக் கம்பனியின் விபரங்களுக்கான படிவம்**

*1. உடமைக் கம்பனியின் பொதுவான தகவல்கள்:-*

*1.1 கம்பனியாக கூட்டிணைக்கப்பட்ட திகதி:----.*
*1.2 தொழில் தொடங்கப்பட்ட திகதி:----.*
*1.3 பின்வருவனவற்றின் முகவரி:----.*

*1.3.1 பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்:----.*
*1.3.2 தலைமை/நிருவாக அலுவலகம்:----.*
*1.3.3 கிளை அலுவலகம்/அலுவலகங்கள்:----.*

*1.4 பிரதான தொழிலின் விபரங்கள்:----.*

*1.5 உடமைக் கம்பனியின் பங்குடமை அமைப்பு:-*

*1.5.1 பத்து முக்கிய பங்குடமையாளர்களின் பெயர்கள்:-*

| பங்குடமையாளரின் பெயர் | பங்குகளின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட பங்கு மூலதனத்தின் % |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |
| 6. | | |
| 7. | | |
| 8. | | |
| 9. | | |
| 10. | | |

2. பணிப்பாளர்களின் சபை:-

| பணிப்பாளரின் முழுப்பெயர் மற்றும் விலாசம் (தயவுசெய்து தலைவரின் பெயரிலிருந்து தொடங்கவும்) | பிறந்த திகதி | தகைமைகள் | அனுபவங்கள் | தே.அ. அட்டை இலக்கம் | கடவுச்சீட்டு இல. |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

***படிவம்: எஸ்என்பீஎவ்ஐ/ஏ 1***

***விண்ணப்பதாரக் கம்பனியின் பெயர்:----.***

***விண்ணப்பதாரக் கம்பனியின் பணிப்பாளர்களினால் சமர்ப்பிக்க வேண்டிய சத்தியக்கடதாசி***

*சத்தியக்கடதாசி*

*....................................என்னும் முகவரியில் வசிப்பவரும் ........................என்ற இலக்கத்தைக் கொண்ட தேசிய அடையாள அட்டை/ கடவுச் சீட்டு என்பவற்றைக் கொண்டவரும் .............................................. (முழுப்பெயர்) ஆகிய நான் இத்தால் பின்வருமாறு (பௌத்த/ இந்து/கிறிஸ்தவர்/கத்தோலிக்கர்/முஸ்லீம் சமயத்தவர் என்ற வகையில் உண்மையாகவும் பயபக்தியுடனும் பிரகடனம் செய்து பின்வருமாறு உறுதிப்படுத்துகின்றேன்/சத்தியப் பிரமாணம் செய்கின்றேன்.*

*1. மேற்கூறப்பட்ட பெயரையுடைய உறுதிப்படுத்துபவர்/ வாக்குமூலம் அளிப்பவராகிய நான் ........................................ இல் (விண்ணப்பதாரக் கம்பனியின் பெயர்) ........................... ஆக பதவி வகிக்கின்றேன். (பதவி).*

*2. பின்வரும் கல்விசார் அத்துடன்/ அல்லது தொழில்சார் தகைமைகளைக் கொண்டிருக்கின்றேன் என உறுதிப்படுத்துகின்றேன்/ தெரிவித்துக் கொள்கின்றேன்.*

*3. வங்கித்தொழில், நிதி, வியாபாரம் அல்லது நிருவாகத்தில் அல்லது இவை தொடர்பான ஏதேனும் துறைகளில் காத்திரமான அனுபவங்களைக் கொண்டிருக்கின்றேன் எனவும் நான் உறுதிப்படுத்துகின்றேன்/தெரிவித்துக் கொள்கின்றேன்.*

*4 நான் இணைப்பு 1 இல் தரப்பட்டுள்ள ஏதேனும் தகைமையீனங்களுக்கு உள்ளாகவில்லையெனவும் இன்றியமையாத ஒரு பகுதியான சத்தியக்கடதாசியை இத்துடன் இணைத்துள்ளேன் என்பதனையும் உறுதிப்படுத்துகின்றேன்/தெரிவித்துக்கொள்கிறேன்.*

*இதில் அடக்கப்பட்ட பிரதிக்ஞைகளை இப் பிரதிக்ஞை செய்பவர் (உறுதிப்படுத்துபவர்/ தெரிவிப்பவர்)வாசித்து விளங்கப்படுத்திய பின்னர் அதனை உண்மை என உறுதிப்படுத்தி/ சத்தியப்பிரமாணம் செய்து............ இல் ....... ஆம் திகதியில் மாதத்தில் அவரின்/அவளின் கையொப்பத்தினை இடுகின்றனர்.*

*ஏற்புடைத்தான முத்திரையை ஒட்டவும்*

*என் முன்னிலையில்*

----,
